மனோகர்
பிக்சர்ஸ்
மனோகரா

நடிகர்கள்

சிவாஜி கணேசன்	...	... மகேந்திரன்
சதாசிவ ராவ்	...	... புருஷோத்தமன்
S. A. நடராஜன்	...	... உக்ரசேனன்
ஜாவர் சீதாராமன்	...	... சத்தியசீலர்
S. S. ராஜேந்திரன்	...	... ராஜப்பிரியன்
S. ராமகிருஷ்ணன்	...	... வசந்தன்
பாண்டியன்	...	... விகடன்
V. M. ஏழுமலை	...	... வைத்தியன்
M. R. சாமிநாதன்	...	... பௌத்தாயனன்
M. K. முஸ்தாபா	...	... கேசரிவர்மன்

நடிகைகள்

T. R. ராஜகுமாரி	...	... வசந்தசேனை
P. கண்ணாம்பா	...	... பத்மாவதி
கிரிஜா ...	...	... விஜயாள்
P. K. சரஸ்வதி	... (நாடக)	... வசந்தசேனை
பண்டரிபாய்	... (நாடக)	... பத்மாவதி
முத்துலக்ஷ்மி	...	... மாலினி

பாடல்கள்

உடுமலை நாராயணக்கவி, சுந்தரவாத்தியார், சுரபி, செல்லமுத்து கவி.

பின்னணி சங்கீதம்

P. G. கிருஷ்ணவேணி (ஜிக்கி) T. V. ரத்தினம், ஜயலக்ஷ்மி, ராஜா, மோத்தி.

நடனம்
குமாரி கமலா

இசையமைப்பு
S. V. வெங்கட்ராமன்

ஸ்டண்ட்-கத்தி சண்டைகள் ஸ்டண்ட் சோமு & பார்ட்டி

ஒளிப்பதிவு
P. ராமசாமி

தந்திரக் காட்சி
G. K. ராமு

ஒலிப்பதிவு
A. கோவிந்தசாமி

ஆர்ட் டைரக்டர்
A. K. சேகர்

மேக்கப்
ஹரி பாபு, ராமசந்திரன்:

ஆடை அலங்காரம்
S. நடராஜன்

உதவி டைரக்டர் T. K. ராமசாமி

மனோகரா

பெண்மை

அவளுக்குக் கணவனே தெய்வம். பெய்யெனப் பெய்யும் மழையாக, பிரியமுள்ள மனைவியாக, பேரரசின் ராணியாக அப்பெருந்தேவி வாழ்ந்தாள். மணவாளன் சுகத்திற்காக மைந்தனையும் தியாகம் செய்யத் துணிந்த மங்கையர்க்கரசி. மாதர்குல மாணிக்கம். பெண்மையின் திருவுருவம். வீரத்தையே மகனாகப்பெற்ற தமிழன்னை.

வீரம்

சேர்நாட்டு மண், தேன் சொட்டும் கவிதைகளால் அந்த மைந்தனுக்குப் புகழ்மாலை சூட்டியது. வேழப்படை கொண்டுவரும் வீரரையும், வேலெடுத்து வேங்கையெனப் பாயும் வேந்தரையும் தன் விழி கிளப்பும் கனலால் விரட்டியடிப்பவன் அவன். அவன் வாளுக்குத் தன் தந்தையைப் பலி கொடுத்தவள், அவன் தோளுக்கு மாலை சூட்டி மகிழ்ந்தாள். அத்தகைய வீரன். தென்னகத்தின் தீரன்.

பொறுமை

வீரம் ஒரு அழகான நிலவு. நிலா எவ்வளவு கலாபமாகத் திகழ்ந்தாலும் அந்த வெளிச்சத்திலே எழுத்தாணி கொண்டு எழுதமுடியுமா, அல்லது ஓலையைத்தான் தெளிவாக படிக்கமுடியுமா? வெறும் வீரம் மட்டும் போதாது மகனே. வீரம், விழலுக்கிறைத்த நீராகாமல் விவேகத்தையும் சேர்த்துக்கொள் என்று, அவன் குமுறிக்கிளம்பிய போதெல்லாம் தடுத்து நிறுத்தி வீரத்தை உறையிலிட்டது தாயாரின் பொறுமை.

வஞ்சகம்

வீரத்தை உறையில் போடுகிருளா—அதை அப்படியே துருப்பிடிக்கச் செய்கிறேன் பார்—என்று முழக்கமிட்டது, வசீகர முலாம் பூசிக்கொண்ட வஞ்சகம்.

இதனுல்

போர்முனையிலே புலியாக மாறும் மனோகரன் அரண்மனையிலே பூனையென அடங்கவேண்டியிருந்தது. அவன் சிறுநகை உதிர்த்தால் பெரும்பகை உதிரும். அத்தகையோன் அமைதியென்னும் சங்கிலியால் கட்டப்பட்டான். அன்னை பத்மாவதியின் ஆணைக்குத் தலைவணங்கினன். எதிர்த்து வந்த பகையைத் தடுத்தொழிக்கத் தயங்கினன்.

பகையோ...........

படைகொண்டு வரவில்லை. பாவை உருவிலே வந்தது. விழியே வேல். மொழியே வாள். அபிநயமே அக்ரோணி சைன்யம். சாகசமே சக்ரவியூகம். அந்த வியூகத்திலே சிக்கினர், வேந்தர் புருஷோத்தமர். மனோகரனின் தந்தை. விஷப்பொய்கை வசந்தசேனை அவருக்கு ஆனந்தத் தடாகமானள். அற்புத சஞ்சிவியானள்.

யார் அவள் ?

அவளோர் பணிப்பெண். ஆரம்பத்திலே ஒரு காதலன். அவனுக்குப் பின் ஒரு கணவன். பின்னர் அவனையும் கொல்ல விஷமிட்டு மன்னர் புருஷோத்தமனின் மடியில் இடம் பிடித்துக்கொண்ட மயக்குமேனியாள். சொந்த புருஷனுக்கும் தனக்கும் பிறந்த குழந்தையை சோழமன்னனின் புதல்வன் எனக்கதைகட்டி அவனுக்குப் பட்டம் கட்டவும் திட்டம் தீட்டியவள். மகாராணி பத்மாவதியை மன்னன் இருதயத்திலேயிருந்து அகற்றினள். மாசற்ற மனோகரனை வேசி மகன் எனவும் பிதற்றினள். "அன்னைக்கோர் அவமானமா? அதைத் துடைப்பேன் அரைநொடியில்" என வாள் சுழற்றிக் கிளம்பினன், ஆள் மயக்கி வசந்தசேனையை அழித்தொழிக்க.

பிறகு?

வேதம் ஒலிக்குமிடம் அந்த வஞ்சகியின் வாய். மற்ற தெல்லாம் எட்டிக்காய்.—என என்னும் மன்னவனும், "கொய்து வருவீர் மகன்-தலையை." எனக்கொடுஞ்சட்டம் பிறப்பித்தான். "இன்னுமா அம்மா பொறுமை?" என்று இடி-முழக்கம் செய்த இளவலை நோக்கி "இப்போது தான் பொறுமை. தந்தையே மகனைக் கொல்வது— அதற்குத் தாயாரும் தலையசைப்பது. தங்கமே! தரணியிலே யாருக் கடா கிடைக்கும் இந்த ராஜ பாக்யம்? போ மகனே, போ. சாகப்போ" என்று தாயாரே வழியனுப்பி வைத்தாள். மணவாளனை மகன் கையிலேயிருந்து மீட்டு மகனை மரண மேடைக்குப்போக விடைகொடுத்தாள். களம்பல கண்ட காளையும் கல்லறை நோக்கி காலெடுத்து வைத்தான். கண்ணீர்க்குளமான பத்மாவதியும், கர்ப்பவதியான அவள் மருமகள் விஜயாவும் காராக்கிரகத்தில் அடைக்கப்பட்டனர்.

அதோடு முடிந்ததா?

பணிப்பெண்ணாக வந்து மன்னனின் பஞ்சணை ராணியாக மாறி அரச குடும்பத்தைக்கெடுத்த அந்தப்பாதகி, தன் அருமந்தச்செல்வன் அசட்டு வசந்தனுக்கு முடிசூட்டவும் நாள் குறிக்கிறாள். "பித்தனுக்குப்பட்டமா?" எனக்கேட்கும் மன்னனையும் சிறையில் பூட்டுகிறாள். சோழ நாட்டையே தன் காலடியில் போட்டு வாட்டுகிறாள். வாழ்வதற்கு வந்து புகுந்து ஆள்வதற்கு அச்சாரம் போட்டுவிட்ட அந்த அழகுமாயை அன்னிய நாட்டானும், தன் ஆரம்பக் காதலனையும் துணைக்கழைத்து, அரண்மனையை வளைத்துவிடுகிறது. மனோகரன் மரண முகப்பில். மகாராணியும் விஜயாவும் சிறைச் சாலையில். மனோகரனின் குழந்தை கத்தி முனையில். மன்னர் புருஷோத்தமரோ சிறைக்கோட்டத்தில். இங்கிலையில்,

பொறுமை பேசுகிறது.

"யாருக்காகப் பொறுமை, பொறுமை என்றுசொல்லி வந்தேனோ அவரையே சிறையில் போட்டுவிட்டபிறகு,

பொறுமைக்கு எங்கேயிருக்கிறது பெருமை. பொறுத்தது போதும். பொங்கியெழு. புதல்வனே. தாயின் ஆணை கிடைத்துவிட்டது, புறப்படு'' என முழக்கம் செய்கிறாள், பத்மாவதி.

வீரம் புறப்படுகிறது.

தேக்கி வைத்திருந்த வீரக்கடலின் மடை திறக்கப் படுகிறது. கந்தகக்கிடங்கிலே தீ கொட்டியதுபோலக் கிளம்புகிறான், வீரன் மனோகரன். தாயகத்தை விடுவிக்க —தருக்கர் இடுப்பொடிக்க—தாயின் துயர் துடைக்க— அவன் தடந்தோள் விம்முகிறது. எரிமலை. பூகம்பம். ஏழ் கடலின் கொந்தளிப்பு. இனி எதிரிகள் தூள்! தூள்!!

வஞ்சகம். ??

வஞ்சகம் வாழ்ந்ததாகவோ—கொடுமை நிலைத்ததாக வோ வரலாறு கிடையாதே. வசந்தசேனை மட்டுமென்ன, விதிவிலக்கா? பொங்கிவரும் புரட்சிவெள்ளத்திலே அந் தப் பொல்லாங்குக்காரி துரும்பானாள். அதுதானே வை யகம், வழக்கமாக வஞ்சகத்திற்கு வழங்கும் வெகுமானம்.

பெண்மை.

வென்றது பெண்மை. கடமை—கண்ணியம்—கட்டுப் பாடு மூன்றையும் போதிக்கும் பெண்மை விரைவில் வெல்வது உண்மை.

மனோகரா

பாட்டு 1

(வசந்தன் விகடன் இருவரும்)

சந்தேகம் இல்லே சந்தேகம் இல்லே
நமக்கு சந்தேகம் இல்லே சந்தேகம் இல்லே
எந்த நாளுமே எதிலும் நமக்கு
எள்ளளவாயிலும் உள்ளபடிக்கு (சந்தே)
அம்மா அப்பா பெத்தது பிள்ளை சந்தேகம் இல்லே
அவர்களை பெத்தது பாட்டன் பாட்டி அதிலேயும் (சந்தே)
சந்தேகம் இல்லே சந்தேகம் இல்லே
காக்கா கறுப்பு—சந்தேகம் இல்லே
கடல் தண்ணி உப்பு—சந்தேகம் இல்லே
இதைக் கண்டவர் உண்டவர் சொன்னார் (சந்தே)
ஆண்பிள்ளைக்கு மீசை முளைக்கும் சந்தேகம் இல்லே
அதுகிடையாது பெண்பிள்ளைக்கு சந்தேகம் இல்லே
அப்பன் கூடே பிறந்தவளத்தை சந்தேகம் இல்லே
அவளுக்கே தான் மீசை முளைத்தால் சித்தப்பன் (சந்தே)
பொம்பிளை உருவம் புத்தியை மாத்தும் சந்தேகம் இல்லே
பொண்டாட்டிரெண்டால் திண்டாட்டம் வருவதும்(சந்தே)
டம்பச் செலவுகள் துன்பம் கொடுக்கும் சந்தேகம் இல்லே
டங்கு வாறுதான் அந்து போயிட்டா சவாரிக் குதிரை
வண்டி நிற்பதும் சந்தேகம் இல்லே
தலையணை மந்திரம் குடும்பத்தைக் கெடுக்கும் (சந்தே)
தாட்க்ஷிண்யம் பார்த்தால் சங்கடம் விளைவிக்கும் (சந்தே)
கலையைப் படிச்சவன் நிலையில் நில்லான்—சந்தேகமில்லே
கட்டிக் கொண்டவள் பட்டத்தரசி சந்தேக மில்லே
காசுக்கு வந்தவள் ஆசைக்கு சரசி சந்தேகம் இல்லே
குட்டி கொழுத்தால் கறிக்காகாது சந்தேகம் இல்லே
குலத்தில் பிறந்தவர் குடிகெட்டாலும்
குணம் போகாது மணம் போகாது—சந்தேகம் இல்லே
நமக்கு—சந்தேகமில்லே!

பாட்டு 2

தேவசேனை — என்னைப் பாரென்னழகைப்பாரு கண்ணாலே
ரெண்டு கண்ணாலே

பார்த்தா
இன்பலோகம் இங்கே தெரியும் தன்னாலே
—என்னைபார்

ஒருவர் — பேஷ் பேஷ்
தேவசேனை — மண்ணில் புதைந்த மாசில்லாத பொன்மணி
உயர்ந்த பெண்மணி
மேவி வாடாமுல்லை ஈடாயில்லாப்
பெண்மணி — மேனி
என்னைப்பார் —இன்பலோகம்

ஒருவர் — எப்படி
மற்றொருவர் — ஆஹா
தேவசேனை — ஆசையுள்ள ஐயாமார்கள்
அல்லாருக்கும் சலாம் சலாம்

எல்லோரும் — சலாம் . . . சலாம்
தேவசேனை — ஆதரிக்கத் திறமிருந்தால்
அருகில் வந்தே பேசலாம் —என்னை
ஓ மீசைக்காரரே —உல்லாச
வேஷக்காரரே
விசிறி மடிப்பு வெள்ளை வேஷ்டி
வெளிச்சக்காரரே
என்னை ஆதரிக்கத்திறமிருந்தால்
அருகில் வந்தே பேசலாம்

ஒருவர் — பே
புடவை ரவிக்கையோடு கொஞ்சம்
பொருளுங் கொண்டு வரட்டுமா . . . .

2வது நபர் — நீ போட்டுக்க பூட்டிக்க மாட்டிக்க நானும்
பொன்னுபரணந்தரட்டுமா . . . . ?

மூன்றாவது — பொன்னும் பொருளும் யேதுமில்லா
யேனைய நான் புலவே
படிச்ச புலவே எனக்கு
புத்தியிருக்கு புகழிருக்குது.......ஊ

தேவசேனை — சொல்லுங்கய்யா......
மூன்றுவது — கடஞ்சொல்லலாமா....
தேவசேனை — ஆ
மூன்றுவது — தாலி கட்டிக்கொள்ளலாமா......?
தேவசேனை — யே புடவை நிங்க பொறுக்கனும்
நீங்க இருக்கனும்
ஓய் புலவரே
மூன்றுவது — யெம்மா....
தேவசேனை — இங்கே புத்திசாலி ஆளுக்கெல்லாம்
வேலேயெயில்லே
நிங்க போயிட்டு வாங்க
மூன்றுவது — வணக்கம்
தேவசேனை — இத்தனை பேரு கூட்டத்திலேயே
இஷ்டம் போலொரு ஆம்பளைச் சிங்கம்
இல்லையா...?

கோரஸ் — 1. யெயில்லே
2. நானிருக்கேன்
3. நானிருக்கேன்
தேவசேனை — நியுண்டா
4. நானும் உண்டு
தேவசேனை — ஆ...... ஆணி முத்துமாலே கொடுக்க
ஆமா உன்னாலே
4-வது நபா — அதை நாம பார்த்ததேயில்லே
தேவசேனை — அஞ்சுவர்ணச்சேலே
5-வது நபர் — இதை நாங்கேட்டதேயில்லே . .
தேவசேனை — நி ஆனை தாரயா . . .
6-வது நபர் — ஆத்தாடி
தேவசேனை — நீ குதிரை
7-வது நபர் — அடி அம்மாடி
தேவசேனை — மேனா........
8-வது நபர் — அதுக்கு நானா...?
தேவசேனை — மேகலே கைவளே மோதிரம் வங்கி
நாகரு ஜடையில்லே காது ஜிமிக்கி
மே மச்சு விடு வைரத்தோடு
ஆடுமாடு காடுங்கரையும்
அல்லாம் கொடுக்க ஆளுண்டா...?

கோரஸ் — நானில்லே
நானில்லே
நானில்லே
நானில்லே

தேவசேனை — உங்க கிட்டல்லாம ஒண்ணுமில்லை
நானுமில்லே ஒடுங்க...ஓடுங்க
சங்கீதம் பாடி சந்தோஷமாக ஆடி -- சங்கீதம்
சரசாங்கி தானே வந்தால் தக்கதுணை தேடி
—சரசாங்கி
சமயமிதே தவரிடிலோ அமையாதென்போல்
ஜோடி — சமய
சிங்கார ராஜ யோக மோகினி
ஜீவ சிந்தாமணி என்போலின்றே யாரினி —
ஜீவ.

பாட்டு 3

(நாடகப் பாட்டு)

நிலாவிலே— சல்லாபமே
நிலாவிலே உல்லாசமாக பாடலாம்
சல்லாபமான காதலோடு ஆடலாம் —நிலாவிலே
நேசம் காணவே நீயும் நானுமே ஆசையினாலே
ஆசையினாலே அவனியின் மீதிலே — நிலாவிலே
கலையும் சிலையும் நாம்— கவியும் பொருளும் நாம்
எழில்'மேவும் நிதி நீயே— இணையாஹேம் மனம் போலே
நிலையான வாழ்வுதான்— நிதமே நாம் தேடுவோம்
நிலையான வாழ்வுதான்— நிலமே நாம் தேடுவோம் —நிலா
அன்பின் கடலிலே அசையும் ஓடம் நீ
இன்பமாம் துறைதேடி வந்த என் துணை நீரே
என்றென்றும் சொந்தமே— இனிதே ஆனந்தமே (என்)
நிலாவிலே— சல்லாபமே
நிலாவிலே பாடலாம்—சல்லாபமாய் ஆடலாம்.

பாட்டு 4

(விஜயா)

வாழ்வதோ மாது நான்
மாள்வதோ இது நாளே
மானம் இழப்பதோ அவ
மானம் சகிப்பதோ —மானம்
இந்த மானிலந்தனில் பேதையாய்
வந்தேன் பிறந்தேனோ —இந்த
சீராரும் செல்வமெனச்
சேர்ந்தெடுத்த தேவே
தென் பாண்டிக்கோவே
போராடும் திண் புயனே
நீ போன பின்னே
நானிருந்தென்ன பயனே
அடிமையாவதோ...பிற
ராட்சி காண்பதோ...துணை
யாருமற்றவளாகினேன்
அனாதையானந்தோ...
தன் —மானம்
நீங்காத வேதனையை நீக்க வந்த
மருந்தே விஷமே —நீங்காத
நிம்மதியின் விருந்தே
நீயன்றி கெதியில்லை நிஜமே.

பாட்டு 5

மனோகரன்— சிங்கார பைங்கிளியே பேசு—செந்
தமிழ் தேனை யள்ளி யள்ளி வீசு —சிங்கார
விஜயா — சங்கம் புகழ் முரசு கொண்ட
தனியரசு — என்
தமிழ் மொழிக்கெதுவோ நீர்
தரும் பரிசு —சங்கம்

மனோகரன்— திங்கள் நிறை மலர் முகத்தில்
செவ்விதழ் சேர்த்து நித்தம் —திங்கள்
திருவே தருவேன் மனம்போல்
குறையாதொரு நூறு முத்தம்—சிங்கார

விஜயா — நீரே சொந்தம் ஆனீர் பேச்சிலே
எதிரி —நீரே

மனோகரன்— அந்த
நினைவே மறந்தேன் உன் கண்வீச்சிலே

விஜயா — இந்த
வீரர் எங்கள் நாட்டுக்கினி அதிபதியே

மனோகரன்— விஜயாள் ஒன்றே போதும் வெகுமதியே

விஜயா — ஆ...

மனோகரன்— ஊம்............ —சிங்கார

மனோகரன்— பாண்டிய நாட்டுப் பூங்குயில்ப் பேடு
ஊஞ்சல் ஆடுதே
ஊஞ்சல் ஆடுதே —பாண்டிய

விஜயா — அது
வேண்டிடும் சோழமண்டலத் தென்றல்
ஓடி வீசுதே
ஓடோடி வீசுதே —அது

மனோகரன்— ஆசைக்கொடி தனிலே
பிணைந்தாடிடும் வேளையிலே —ஆசை

இருவரும் — ஆணொடு பெண்ணும் கண்ணொடு கண்ணால்
ஜாடை பேசுதே— ரெண்டும்
ஊடல் பேசுதே —ஆணொடு

விஜயா — பளிங்குபோல தெளிந்த நீரில்
மீன்கள் துள்ளி யாடுதே—இரு
மீன்கள் துள்ளி யாடுதே —பளிங்கு

மனோகரன்— விளங்கும் எந்தன் விஜயாவின் கண்
மீன்கள் ரெண்டும் ஆடுதே—விழி
மீன்கள் ரெண்டும் ஆடுதே —விளங்கும்

விஜயா — அலையோடு அலை தாவி
ஒன்று சேர்ந்ததே -அலை

மனோகரன்— ஆம்
அதுபோல் நம் இரண்டுள்ளம்
ஒன்று சேர்ந்ததே
உள்ளம் ஒன்று சேர்ந்ததே —ஆம்
இருவரும் — பளிங்கு போலே தெளிந்த நீரில்
மீன்கள் போலே ஆடுவோம்—இரு
மீன்கள் போலே ஆடுவோம்-

பாட்டு 6

(வசந்தி)

பொழுது புலர்ந்ததே மெல்லென எழுவீர்—பொ
விழிமலரே என்மீது மலர —பொ
இளமாங்குயில்கள் இசை பாடிடவே
பசுந்தோகை மயில் மகிழ்ந்தோடிடவே
வண்டுகள் ரீங்காரம் போலே
இன்புறும் யாழேந்தி காலைப்பண்பாடும் —பொ
என தாசையெனும் கடல் மீதினிலே
எழிலாக வரும் ரவிமாமணியே
இணைபிரியேன் உம்மை நானே
என்னுயிரே இன்பத்தேனே பூமானே —பொ

பாட்டு 7

கோரஸ்

வசந்த விழா ஒசந்த திருவிழா —வசந்த
மாசி மாத மதியத்திலே நாம்
கொண்டாடும் விழா —மாசி
மணம் பொருந்தும் ஆணும் பெண்ணும்
மகிழ்ச்சியின்பம் தேடலாம்— இதில்
வயது முதிர்ந்த கிழவரும் நல்ல
வாலிபம் கொண்டாடலாம்
மதனும் ரதியும் பவனிவரும் விழா
கொண்டாடும் விழா —மதனும்
வசந்தன் — என்னைப் பாரென்னழகைப் பாரு கண்ணாலே
பாரு கண்ணாலே
எங்கப்பா போலெ இருப்பேன் பாருபின்னாலே
ஹேஹ ஹேஹ —என்னைப்

கோரஸ்

மாசி மாத மதியத்திலே நாம்
கொண்டாடும் விழா
வசந்த விழா! வசந்த திருவிழா

பாட்டு 8

(தலைவனும்—கோஷ்டியும்)

கோஷ்டி — கும்புடறமுங்க
தலைவன் — முன்னொரு காலத்தில்—ஆமா!
முக்கண்ணனாகிய பரமசிவன் தவத்தைக் கெடுக்க—ஆமா!
முப்பத்து முக்கோடி தேவர்களும்—ஆமா!
48000 ரிஷிகளும்—ஆமா!
மன்மதனை ஏவிவிட்டார்.........ஆ—ஆமா!
அப்போது மன்மதனனவன்........ஆ
ஆழாழி முரசொலிக்க—ஆமா! முரசொலிக்க
அழகு சந்திரக்குடை விளங்க—குடை விளங்க!
சேலான கொடி துலங்க—ஆமா! கொடி துலங்க
சேயிழையார் சேனை சூழ—ஆமா! சேனை சூழ!
இப்படியாகத்தானே மன்மதன் கிளிப்பரி பூட்டிய
தென்றல் தேரில் ஏறிக்கொண்டு—ஆமா!
ஈசன் தவம் செய்யுமிடத்துக்கு வந்தான்—ஆமா!
வந்து.........
கரும்பு வில்லைக்கரந்தனிலே
காமராஜனெடுத்தார்
ஆமா............காமராஜனெடுத்தார்
அதில்
கரும்பு நாணை யேத்தி முல்லை
அரும்பு பாணந்தொடுத்தார்
தின தெந்தின தின தெந்தின
தின தெந்தின—தினன
தின தெந்தின தினதெந்தின
தின தெந்தின தினன
நிறைஞ்ச தவம் கலைஞ்ச ஈசன்
நெற்றிக் கண்ணைத் திறந்தான்

நெற்றிக்கண்ணைத் திறந்தான்
அப்போ
நின்றமதன் சாம்பலாக
நிலத்தில் விழுந்து எரிந்தான்
அப்போ நின்றமதன் சாம்பலாக
நிலத்தில் விழுந்து எரிந்தான்
இந்த விதமாகத்தானே—ஆமா!
மன்மதன் எரிஞ்ச சங்கதி—ஆமா!
வாயு தேவனால் அண்ட சரா
சரங்களுக்கும் அறிவிக்கப்பட்டது.
ரதி தேவிக்கும் தெரிந்தது—ஆமா!
தெரிந்தவுடனே...........ஆஹா.........
ஆமா............
ஐயோ நானென்ன செய்வேன்—பிராணநாதா!
ஆருமற்ற பாவியானேன்—பிராணநாதா!
குய்யோ முறையோவென்று—கூக்குரலிட்டாள்!
குட்டிக்கரணம் போட்டு—குதி குதிச்சா!
வாயை விட்டு—கத்தினு!
மாரடிச்சா—மண்டையொடைச்சாள்!
மாலையறுத்தா—தாலியறுத்தாள்?
ஐயோ ஐய்யோ......ஐய்யே ஐய்யோ
இப்படி புரண்டழுதாள்—ஆமாமா...
பிரம்மாவிடம் சென்று தாலிப் பிச்சை கேட்டாள்—ஆமா!
நடக்கலே...
உம்......
இந்திரங்கிட்டே போனு—ஆமா!
நாரதர் கிட்டே போனு—ஆமா!
சந்திரங்கிட்டே போனு—ஆமா!
சகலதேவர் கிட்டவும் போனு—ஆமா!
வேலையாகலே...
ஓஹோ...
கடைசிலே வைகுந்த வாசங்கிட்டப போனு
போயி மாமாண்ணு—அவரு
ஏமாண்ணுரு...
எம்புருசெ இல்லியே! நா
என்ன பண்ணட்டும் அப்படிண்ணு......

மருமகளே! நானிருக்கேன்
கவலைப்படாதே......அப்படிண்ணுசொல்லி
ஒம்புருசே, ஒங்கண்ணுக்குமட்டும்
தெரிவா
ஆமா.........
உலகத்தார் கண்ணுக்கு தெரிய மாட்டாண்ணு
வரங்கொடுத்தார்
அவங்களும் சந்தோஷமாக வாழுராங்க
அப்பேறபட்ட
மதனும் ரதியும் பவனி வரும் விழா
கொண்டாடும் விழா
வசந்த விழா......ஒசந்த திருவிழா

பாட்டு 9

விகடன் — பொம்பளை தானா.........நீ
பொம்பளை தானா............போடி
உனக்கு கோடி கோடி புண்ணியமாகப்
போகட்டும் சொல்லு—பொம்பளை

பெண் — அட
கண்ணு கெட்டுப் போச்சா......
உனக்கு
கண்ணு கெட்டுப் போச்சா......
கல்லுபோலெ எதுக்கு நிக்கிற
கட்டழகியைப் பார்த்தும் கூட —கல்லு
கண்ணு கெட்டுப் போச்சா......
உனக்கு

விகடன் — ஏண்டியம்மா உனக்கு வயசு
எத்தனையாச்சு

பெண். — இந்த மாசம் தீர்ந்ததுன்னு
இருபத்தஞ்சாச்சு

பாட்டு 10

காதல் கொண்டாடுகிறார் எல்லோரும் —காதல்
காவினில் காமன் திருநாளில் ஆண்பெண் —காவினில்
காதல் கொண்டாடுகிறார் —காதல்

சீதள மாமலர் செண்டுகள் வீசி —சீதள
சிங்காரமாய் மகிழ்வோடு பேசி —காதல்
வசந்த மாமலர் மாலை
இது வளர்க்கும் ரதிபதி மாலை —வசந்த
இசைந்த நேரமிது நல் மாலையே
உயர் இன்பம் தங்கும் நமதன்பும் பொங்கும்
—இசைந்த
ஒசிந்திடும் தோகை மயிலென ஆடி
ஒண்டொடியார் உறவோடு பாடி —காதல்.

பாட்டு 11

இன்பநாளிதே இதயம் பாடுதே
ஈருயிரொன்றாய் அன்பு கலந்து
இன்பம் தேடும் நாளிதே—திருநாளிதே
இன்னிசை கீதம்பாடுதே—மனம்பாடுதே
இன்பநாளிதே—இதயம் பாடுதே
புதுமணமலரின் மதுவினை உண்டு
பூரண நிலவும் சிரிக்குதே
பொன்னொளி நெஞ்சை மயக்குதே
பூரித்தே மனம் பாடுதே
இன்பநாளிதே—இதம் பாடுதே
கனிந்தது நெஞ்சம்—முடிந்தது எண்ணம்
கண்டோம் இன்றே அமரலோகமே
கொண்டோம் இன்றே அமுதபானமே
கனவும் நனவாய் மாறுதே
இன்பநாளிதே—இதயம் பாடுதே

Printed at S. R. V. Press, Woods Road, MADRAS-2.

54

கதை
நாடகப்பேராசிரியர்
ராவ் பகதூர் P. சம்பந்த முதலியார்

★

திரைக்கதை—வசனம்
கலைஞர் கருணாநிதி

★

சீனரியோ & டைரக்ஷன்
பிரசாத்

தயாரிப்பு
M. சோமசுந்திரம்

★

STUDIO
NEPTUNE STUDIOS LTD., MADRAS.
Recorded on R.C.A. Sound System.

Rights Controlled By
RADHAKRISHNA FILMS LTD.
ALLEPPEY.